www.padippakam.com



# கே. டானியல்
# வாழ்க்கைக் குறிப்புகள்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கே. டானியல்
# வாழ்க்கைக் குறிப்புகள்

வி. ரி. இளங்கோவன்

'சி. டி. சி.' வெளியீடு
துஜாஸ், பிரான்ஸ்.

படிப்பகம்

www.padippakam.com

கே. டானியல்
வாழ்க்கைக் குறிப்புகள்

வி.ரி. இளங்கோவன்

பதிப்பு : வைகாசி 2002

வெளியீடு : ஐரோப்பிய கீழைத்தேச தொடர்பு மையம்
துலூஸ், பிரான்ஸ்.

**C D C EUROPE ORIENT**
**B P 229**
**31000 TOULOUSE**
**FRANCE.**

**Tél. : 05 61 55 00 13** **Fax : 05 61 55 00 13**
**06 64 66 39 28**
**e-mail : elangovana@aol.com**

படிப்பகம்

www.padippakam.com

## 'பஞ்சமரியப்' படைப்பிலக்கிய முன்னோடி

## மக்கள் எழுத்தாளர்

## கே. டானியல் வாழ்க்கைக் குறிப்புகள்

'பஞ்சமரியப்' படைப்பிலக்கிய முன்னோடி. மக்கள் எழுத்தாளர், மக்கள் விடுதலைப் போராளி. 'தலித்' இலக்கியப் பிதாமகர் என ஈழத்திலும் தமிழகத்திலும் மதிக்கப்படுபவர் கே. டானியல்.

யாழ்ப்பாணம். ஆனைக்கோட்டைக் கிராமத்தில் 1927ம் ஆண்டு பங்குனி 25ம் திகதி டானியல் பிறந்தார். வறுமையின் தாக்கத்தாலும், சமூக அடக்குமுறைக் கொடுமைகளாலும் பள்ளிப்படிப்பை ஐந்தாம் வகுப்புடன் நிறுத்தவேண்டியதாயிற்று.

படிப்பகம்

சிறுவயது முதல் கொண்டே உழைக்கவேண்டியவரானார். சலவைத் தொழில். குளிர்பான வியாபாரம். கள் வியாபாரம். மீன் வியாபாரம், கடற்றொழில், பழைய இரும்பு வியாபாரம். கோழி வளர்ப்பு, பெயின்டிங், நெசவு. புத்தக வியாபாரம் உட்பட பல தொழில்கள் செய்து ஈற்றில் வெல்டிங். ரேணிங். சேப்பிங் தொழில் புரிந்தார்.

பதினாறு வயதிலிருந்தே பொதுக்காரியங்களில் ஈடுபட்டுழைத்தார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை யாழ். பிரதேசத்தில் 1945இல் ஆரம்பித்து வைத்து, கட்சியைக் கட்டியெழுப்புவதிலும் கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தைப் பரப்புவதிலும் தம்மை அர்ப்பணித்து இயங்கிய முன்னோடிகளில் ஒருவரான மு. கார்த்திகேசன் போன்றோரின் தொடர்பினால் அரசியலில் தீவிர நாட்டம் செலுத்தத் தொடங்கினார்.

1947ஆம் ஆண்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டபோது, அதன் முக்கிய தலைவர்களில் ஒருவரான ப. ஜீவானந்தம் தலைமறைவாகி யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரது தொடர்பும் அரசியல் கலை இலக்கியத் துறைகளில் மிகுந்த ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் டானியலுக்குக் கொடுத்தது.

சிறுபான்மைத் தமிழர் மகாசபை, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் முன்னணி செயல்வீரனாகச் செயற்படத் தொடங்கினார்.

ஈழகேசரி.

சுதந்திரன், வீரகேசரி, தினகரன் போன்ற இலங்கைப் பத்திரிகைகளிலும், ஜனசக்தி, தாமரை, சரஸ்வதி போன்ற தமிழக இதழ்களிலும் பல சிறுகதைகளை எழுதினார். சுதந்திரன் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரது 'அமரகாவியம்' என்ற சிறுகதை பரிசில் பெற்றது. சிற்பியின் 'ஈழத்துச் சிறுகதைகள்' தொகுதியில் இவரது 'உப்பிட்டவரை' என்ற சிறுகதை இடம்பிடித்துள்ளது. இலங்கைக் கலைக்கழக வெளியீடான 'சுதந்திர இலங்கையின் தமிழ்ச் சிறுகதைகள்' என்ற தொகுப்பில் இவரது 'வள்ளி ' என்ற சிறுகதை வெளிவந்துள்ளது. ஆங்கிலம், சிங்களம், ரஷ்ய, சீன மொழிகளிலும் இவரது சில சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள், சமூக அரசியல் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். 'டானியல் கதைகள்' என்ற சிறுகதைத் தொகுதி முதலில் வெளியானது. 'பஞ்சமர்' நாவல் (முதல் பாகம்) 1972இல் வெளியானது. இதற்கு 1973ம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசில் கிடைத்தது. பின்னர் வெளிவந்த 'உலகங்கள் வெல்லப்படுகின்றன' சிறுகதைத் தொகுதி 1975ம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றது. இதே ஆண்டு வீரகேசரி பதிப்பக வெளியீடாக 'போராளிகள் காத்திருக்கின்றனர்' நாவல் வெளிவந்தது.

1981ம் ஆண்டு சென்னை 'சி. எல். எஸ்' நண்பர் வட்டத்தினர் தை 17. 18ம் திகதிகளில் நடாத்திய கருத்தரங்கில் 'பஞ்சமர்' நாவல் (முதலாம் பாகம்) தனியொரு அமர்வில் விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இக்கருத்தரங்கில், விசேட அழைப்பின்பேரில் கலந்துகொண்டு டானியல் சிறப்புரையாற்றினார்.

'பஞ்சமர்' நாவல் இரண்டு பாகங்களும் சேர்த்து அங்கு வெளியிட அழைப்பு வந்தது. தஞ்சைப் ப்ரகாஷின் அழைப்பின்பேரில் தஞ்சை சென்றார்

'கீழவெண்மணிக்' கிராமத்திற்குச் சென்று, 44 மனித உயிர்கள் ஒரு சிறு குடிசையில் உயிருடன்போட்டு எரிக்கப்பட்ட இடத்தைப் போய்ப் பார்த்தார். அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினார்.

'பஞ்சமர்' நாவல் இரண்டு பாகங்களும் சேர்த்து 1982ல் தமிழகத்தில் வெளியிடப்பட்டது. அடுத்து கோவிந்தன். அடிமைகள் ஆகிய நாவல்களும் தமிழகத்தில் வெளியிடப்பட்டன. 'இலங்கையிலிருந்து ஓர் இலக்கியக் குரல்' என்ற தலைப்பில் டானியல் பேட்டியும் தமிழகத்தில் நூலுருவில் வெளிவந்தது. 'பூமரங்கள்' குறுநாவல் ஈழத்தில் வெளிவந்தது.

1986 ஜனவரி 30ம் திகதி. அரசியல் இலக்கிய நண்பர்களைச் சந்தித்து உரையாடும்

பொருட்டும், கண் சிகிச்சை பெறும்பொருட்டும், கானல் நாவல் அச்சாவதைப் பார்வையிடும் பொருட்டும் டானியல் தமிழகம் சென்றார்.

தமிழகத்திலும், பாண்டிச்சேரியிலும் பல இலக்கிய கருத்தரங்குகளில் கலந்துகொண்டார். அரசியல் இலக்கிய நண்பர்களுடன் கலந்துரையாடினார்.

நீரிழிவு வியாதியின் கடுந்தாக்கத்துக்குள்ளாகியிருந்த டானியல், கண் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டபின் கடும்பாதிப்புக்குள்ளாகி 1986ம் ஆண்டு பங்குனி 23ம் திகதி காலை தஞ்சாவூர் தங்கசாரதா மருத்துவமனையில் காலமானார். இலங்கை, இந்திய பத்திரிகைகள் பலவற்றிலும் வானொலிகளிலும் டானியல் மரணம் குறித்து செய்தி வெளியிடப்பட்டது.

24ம் திகதி மாலை, தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் முன்னூறுக்கு மேற்பட்ட இலக்கிய அரசியல் நண்பர்கள் பின்தொடரச் செங்கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட வண்டியில், செங்கொடி போர்த்தப்பட்ட டானியல் உடல் தஞ்சை இராஜகோரி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அடக்கம்செய்யப்பட்டது. கவிஞர் பொதியவெற்பன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி வைபவத்தில் பிரபல

எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், அரசியல் தோழர்கள் பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

ஒரு புரட்சியாளனுக்குரிய அனைத்து மரியாதைகளுடனும் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

அவரது உடல் அடக்கம்செய்யப்பட்ட இடத்தில் அரிவாள், சுத்தியல் சின்னம் பொறிக்கப்பட்ட அழகிய நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

1963இல் கம்யுனிஸ்ட் கட்சி சித்தாந்த அடிப்படையில் பிளவுபட்டபோது, மார்க்ஸிச, லெனினிச, மாஓ சேதுங் சிந்தனை வழி புரட்சிகர மார்க்கத்தையே டானியல் ஏற்றுக்கொண்டவர்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க அமைப்பாளராகவும், மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத் தலைவராகவும் இறுதிவரை பணிபுரிந்தவர்.

மக்கள் பணிபுரிந்த இந்த மனிதரை, 1971ம் ஆண்டு கிளர்ச்சிக் காலத்தில் அடக்குமுறைகளைச் சகல மக்கள் மீதும் மேற்கொண்ட அரசு சுமார் 11 மாதங்களுக்கு மேலாகச் சிறையில் பூட்டியது. வாழ்நாளில் பல தடவைகள் பொலிஸ் கெடுபிடிகளுக்கும், விசாரணைகளுக்கும் உள்ளானவர். பல

தடவைகள் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டவர்.

நேர்மைமிக்க அரசியல் தலைவர் எனப் புகழ்பெற்ற, இலங்கை கம்யுனிஸ்ட் கட்சி (மாஓ பாதை) தலைவர் தோழர் என். சண்முகதாசன் மீது டானியல் பெருமதிப்புக் கொண்டிருந்தார். தோழர் சண்முகதாசனும் டானியல் மீது மதிப்புக் கொண்டிருந்தார்.

டானியல் மறைவை அறிந்த தோழர் சண்முகதாசன், "இளமைக் காலம் முதல் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் கிளையின் நடவடிக்கைகளில் முக்கிய பங்களிப்புச் செய்தவர் டானியல். அறுபதுகளின் பிற்பகுதியில் ஏற்பட்ட வெகுஜன இயக்க எழுச்சிக்குத் தலைமை கொடுத்தவர்களில் ஒருவர். அவரது இழப்பு இந்த நாட்டின் இலக்கியத் துறைக்குப் பேரிழப்பு. அவர் துணிவுமிக்க போராளி, நேர்மைமிக்க தோழர். நான் நல்ல தோழனை, அன்பு நண்பனை இழந்துவிட்டேன்.." என வேதனையோடு எழுதினார்.

டானியல் மறைவின் பின்னர் அவர் எழுதிவைத்த கானல், தண்ணீர், பஞ்சகோணங்கள் ஆகிய நாவல்களும், நெடுந்தூரம், மையக்குறி, முருங்கை யிலைக் கஞ்சி குறுநாவல்கள் அடங்கிய தொகுப்பும் வெளிவந்தன. அவர்

இறுதிநாட்களில் எழுதிய 'சா நிழல்' குறுநாவலும் பின்னர் வெளிவந்தது.

டானியல் தன் எழுத்துப்பணி குறித்து எழுதிய கட்டுரையும் 'என் கதை' என்ற பெயரில் வெளியாகியது. டானியல் குறித்து அரசியல், இலக்கியக், கல்வித்துறை சார்ந்தோர் எழுதிய கட்டுரைகளின் சுருக்கம் 'நல்ல மனிதத்தின் நாமம் டானியல்' என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

ஜப்பானியப் பல்கலைக் கழகத்தில் டானியல் படைப்புகள் ஆய்வுசெய்யப்படுகின்றன. இலங்கை, இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் அவரது படைப்புகள் ஆய்வுசெய்யப்படுகின்றன.

டானியல் பிலோமினம்மா என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டவர். இவர்கள் நான்கு பெண் பிள்ளைகளையும், இரண்டு ஆண் பிள்ளைகளையும் பெற்றனர். மனைவி பிலோமினம்மா டானியலது கலை இலக்கிய, அரசியல் நடவடிக்கைகள் யாவற்றுக்கும் இறுதிவரை ஒத்துழைப்பு நல்கி, உறுதுணையாக வாழ்ந்தவர். டானியல் மறைந்த ஒருசில மாதங்களில் இவரும் காலமாகிவிட்டார்.

www.padippakam.com

'யாழ். குடாநாட்டில், அடித்தளச் சமூகத்தில் பிறந்து, அறிவுஜீவிகளின் மேட்டிமைத்தனத்தை அம்பலப்படுத்தி, கலைத் தன்மைகொண்ட படைப்பிலக்கியத்தை உருவாக்கிக் காட்டிய டானியல், ஓர் இலக்கியப் புரட்சியாளர். தலித் படைப்பிலக்கியத்தின் வடிவங்களுக்கும், வார்த்தைகளுக்கும், வரைமுறைகளுக்கும் 'அகராதி' ஒன்று உண்டு என்றால், அவை டானியலின் படைப்புகளே..' எனத் தமிழக முற்போக்காளர்கள் போற்றுகின்றனர்.

இன்றுவரை அவரது சமூகப் பணிகள், போராட்டங்கள், பங்களிப்புகள், படைப்புகள் கலை இலக்கிய, கல்வி, அரசியல் துறைசார்ந்தோரால் முன்மாதிரியாகக் கொள்ளப்படுகின்றன.

டானியல் நாமம் நின்று நிலைக்கும்!

*- வி. ரி. இளங்கோவன்.*

படிப்பகம்

www.padippakam.com

# வாங்கிப் படியுங்கள்!

## 'சி. டி. சி.' வெளியீடுகள்

1. பரிசு
   சிறுவர் மஞ்சரி
   ஆசிரியர்: பத்மா இளங்கோவன்

2. சங்கப்பலகை
   கவி மஞ்சரி
   ஆசிரியர்: மாகவி வீரவாகர்

3. பாப்பா பாடல்கள்
   பத்மா இளங்கோவன்

4. கரும்பனைகள்
   வி. ரி. இளங்கோவன் கவிதைகள்
   ஒலித்தட்டு (சி. டி.)

5. சிகரம்
   வி. ரி. இளங்கோவன் கவிதைகள்

6. கரும்பனைகள்
   வி. ரி. இளங்கோவன் கவிதைகள்

7. என் கதை
   கே. டானியல்

8. இது ஒரு வாக்குமூலம்
   வி. ரி. இளங்கோவன் கவிதைகள்

படிப்பகம்

www.padippakam.com

9. மானவீரன் கும்பகருணன்
நாவேந்தன்

10. நான் ஒரு பிச்சைக்காரன்
நாவேந்தன்

11. நாவேந்தன் நினைவலைகள்

12. மகதலேனா மரியாள்
(குறுங்காவியம்)
நாவேந்தன்

13. நல்ல மனிதத்தின் நாமம் டானியல்
(சில பதிவுகள்)
தொகுப்பு - வி. ரி. இளங்கோவன்

14. கம்யூனிஸ இயக்க வளர்ச்சியில்
தமிழ்ப் பெண்கள்
வீ. சின்னத்தம்பி

15. மழலைப் பாடல்கள்
பத்மா இளங்கோவன்

16 பிள்ளைப் பாடல்கள்
பத்மா இளங்கோவன்

17. மண் மறவா மனிதர்கள்
வி. ரி. இளங்கோவன்

18. மண் மறவாத் தொண்டர் திரு
தொகுப்பு - வி. ரி. இளங்கோவன்

படிப்பகம்

www.padippakam.com

## விரைவில் வெளிவரவுள்ளன...

மக்கள் நேசன்

# கார்த்திகேசன் மாஸ்டர்



□ அப்பா வருவார்

சி. ரி. இளங்கோவன் சிறுகதைகள்

படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

# விரைவில் வெளிவரவுள்ள நாவேந்தன் நூல்கள்



புதிய பதிப்பு

- [ ] வாழ்வு
  (சிறுகதைத் தொகுதி– சாகித்திய மண்டலப் பரிசு– 1964)

- [ ] தெய்வமகன்
  (சிறுகதைத் தொகுதி)

- [ ] சிறி அளித்த சிறை
  (ஈழத் தமிழர் சட்டமறுப்பு போராட்ட முதல் நூல்)

- [ ] சிலப்பதிகாரச் செந்நெறி
  (ஒரு சொற்பொழிவு)

- [ ] நாவேந்தன் கட்டுரைகள்

- [ ] நாவேந்தன் கவிதைகள்

தொடர்புகளுக்கு:

'சி. டி. சி.'
தொலைபேசி இல. : 05 61 55 06 13

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# டானியல் படைப்புகள்...

- □ டானியல் கதைகள் - சிறுகதைத் தொகுதி
- □ பஞ்சமர் - நாவல் (முதல் பாகம்)
- □ உலகங்கள் வெல்லப்படுகின்றன - சிறுகதைத் தொகுதி
- □ போராளிகள் காத்திருக்கின்றனர் - நாவல்
- □ பஞ்சமர் - நாவல் (இருபாகங்களும் அடங்கியது)
- □ இலங்கையிலிருந்து ஓர் இலக்கியக் குரல் -- பேட்டி
- □ கோவிந்தன் - நாவல்
- □ அடிமைகள் "
- □ கானல் "
- □ தண்ணீர் "
- □ பஞ்சகோணங்கள் "
- □ டானியல் குறுநாவல்கள் - நெடுந்தூரம்<br>மையக்குறி<br>முருங்கையிலைக் கஞ்சி
- □ பூமரங்கள் - குறுநாவல்
- □ சா நிழல் - "
- □ என் கதை - கட்டுரை

படிப்பகம்